2013 மே 15] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த நன்றிகளோடு எனது நன்றிகளையும் இணைத்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர்.*

***திரு. பி.ஜி. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் நலன் காக்க சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானம் நிறைவேற்றிய உலகத் தமிழர்களின் உண்மைப் பாதுகாவலர், உச்ச நீதிமன்றத்தில் போராடி காவேரி நீரில் நமக்குள்ள உரிமையை நிலைநாட்டிக் கொடுத்த காவேரித்தாய், தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், பன்மொழிப் புலமை படைத்த ஒப்பற்ற தலைவி, வருங்கால இந்தியாவை வழிநடத்திச் செல்லும் தகுதியும், பேராற்றலும் படைத்த இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி இந்த அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

2012-2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவினுடைய ஒன்பதாவது மற்றும் பத்தாவது அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன். போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் பத்தாவது அறிக்கையினை அச்சடித்துப் பேரவைக்கு அளிக்க இயலவில்லை. இந்த அறிக்கையின் படிப்பெருக்கி நகல்கள் உறுப்பினர்களுடைய பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிடப்பட்ட பிரதிகள் கிடைத்தவுடன் உறுப்பினர்களுக்குத் தனித்தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.